www.Padasalai.Net www.CBSEtips.in

KANCHIPURAM DT

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: 

நேரம்: 1.30 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** 8×1=8

1. பொருத்துக:

அ) விரியன் - 1. தண்டை
ஆ) திருமுருகு - 2. காலாழி
இ) நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு
ஈ) குண்டலப்பூச்சி - 4. பாடகம்

அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

2. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

3. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க:

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

4. அலைகடல் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

5. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாம் வெளியிடப்பட்டது "கவிதை கிரீடம்" என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

6. 'திருக்குற்றாலநாதர் கோவில் வித்துவான்' என்னும் சிறப்புப் பட்டப்பெயர் பெற்றவர் யார்?

அ) உ.வே.சாமிநாத ஐயர் ஆ) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
இ) திரிகூடராசப்பக் கவிராயர் ஈ) திரு.வி.க

7. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

8. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

**II. எவையேனும் நான்கனுக்கு விடையளி:** 4×2=8

9. இந்திய கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
10. உழைப்பாளர்களின் தோள் வலிமையில் விளைந்தன யாவை?
11. தொடர் அமைத்து எழுதுக: அன்றொரு நாள், நிழலிருந்து
12. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
13. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் தருக.
14. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரியின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. எவையேனும் நான்கனுக்கு விடையளி:** 4×3=12

15. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
16. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துக்களாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?
17. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
18. சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
19. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்துக் குறிப்பு வரைக.
20. ஆக்கப்பெயர் விகுதிகள் தற்கால வாழ்வியலில் மிகுந்துள்ளன ஏன்?

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

21. *ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக:*
    அ) ESCALATOR ஆ) PERSONALITY
22. *மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:*
    அ) தாளம் போடுதல் ஆ) முதலைக் கண்ணீர்
23. *விகுதியைக் கொண்டு ஆக்கப்பெயரைக் கண்டறிக:*
    அ) அறிவைத் தேடிப் போகுமிடம், உலகம் அறிய உதவுமிடம். (அகம்)
    ஆ) வந்தால் மகிழ்ச்சி இது, உழைத்தால் கிடைக்கும் இது (மானம்)
24. *ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
    அ) பெற்ற ஆ) அழைத்தான்
25. *ஏதேனும் ஒன்றுக்கு புணர்ச்சி விதி தருக:*
    அ) பயமில்லை ஆ) மணிக்குலம்

**V. பெருவினா (அனைத்து) வினாக்களுக்கும் விடையெழுதுக:** 2×5=10

26. பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

(அல்லது)

'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக?

27. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக?

(அல்லது)

சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விள்க்குக?

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** 1×6=6

28. அ) 'சிற்றூரும்' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

★★★ / ★★★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com